## சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊராட்சி உதவியாளர்கள் நிலை–I மற்றும் நிலை II, முழுநேர / பகுதிநேர ஊராட்சி எழுத்தர்களாக பணிபுரிந்த பணியாளர்கள் 01.04.2003–க்கு முன்னர் இளநிலை உதவியாளர் நிலையில் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டவர்கள் – தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதிய கணக்கில் எடுத்துக் கொள்ள அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அ.ஆ.(நிலை) எண்.39

நாள்: 13.06.2011
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.408, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 25.08.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.99250/ 2010/இ3, நாள் 27.12.2010

*******

**ஆணை :**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வரையறுக்கப்படாத பணி (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக்கூலி (Daily Wages) அடிப்படையில் பணிபுரிந்து, நிரந்தரப் பணியில் 01.04.2003–க்கு முன்னர் நிரந்தரப் பணியில் ஈர்க்கப்பட்ட அனைவருக்கும் பொருந்தும் வகையில், அவர்களை நிரந்தரமாகப் பணியில் ஈர்க்கப்படுவதற்கு முன், 01.01.1961–க்குப் பின் பணிபுரிந்த வரையறுக்கப்படாத பணிக்காலம் (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக்கூலி (Daily Wages) அடிப்படையிலான மொத்த பணிக்காலத்தில் பாதியை, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களது ஓய்வூதியத்திற்குத் தகுதியான பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதியப் பயன்களுக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் ஊராட்சி உதவியாளர் பணியிடத்தில் நிலை–1, நிலை–2 என இரு நிலைகளில் எந்த நிலையில் பணிபுரிந்திருந்தாலும், மேலும், முழுநேர ஊராட்சி எழுத்தராகவோ அல்லது பகுதிநேர ஊராட்சி எழுத்தராகவோ பணிபுரிந்திருப்பினும் அவர்கள் 01.04.2003–க்கு முன்னர் இளநிலை உதவியாளர் நிலையில் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டிருப்பின் அவர்களது மேற்காணும் தொகுப்பூதிய பணிக்காலத்தில் 50 விழுக்காடு பணிக்காலத்தினை ஓய்வூதியத்திற்கு எடுத்துக் கொண்டு ஓய்வூதியப் பயன்களை பெற்று வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா.)